அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், லோறன்ஸ்கூக்
ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, LØRENSKOG
ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, LØRENSKOG

# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 10-2022*

**கல்வி - 12.03.2022 சனிக்கிழமை – 09:30 – 12:30 - வழமைபோல் நடைபெறும்.**
வகுப்புப் பிரதிநிதிகள் மற்றும் பெற்றோர்குழுவின் ஒத்துழைப்புடன் தமிழ்ப் பாடசாலை நேரடியாக ஓசன் பாடசாலையில் - ஓசன் பாடசாலையினரால் வழங்கப்பட்ட விதிகளுக்கமைய நடைபெறும்.

**12.03.2022 அன்று திருக்குறள் மற்றும் பேச்சுப்போட்டிக்கான தெரிவுப்போட்டிகள் நடைபெறும்.**

**விபரம்:**

- தெரிவுப்போட்டியில் பங்குபற்றும் மாணவர்களின் பெற்றோர்களில் ஒருவர் மட்டும் போட்டி நடக்கும் நேரத்தில் வகுப்பில் மாணவர்களுடன் நிற்கலாம்.
- 8, 9, 10 ம் வகுப்புகளுக்கான போட்டிகள் மேல் கட்டடத்தில் கீழே உள்ள மண்டபத்தில் நடைபெறும்.
- ஏனைய வகுப்புகளுக்கான போட்டிகள் அவர்களின் வகுப்பறையில் நடைபெறும்.
- நடுவர்களின் தீர்ப்பே முடிவாக அமையும்.
- மழலையர் வகுப்பை தவிர மற்றைய வகுப்புகளுக்கு 11.15 – 11.45 வரை இடைவேளை நடைபெறும்.

**திருக்குறள் மற்றும் பேச்சுத் தெரிவுப்போட்டிகளுக்கான நேர அட்டவணை:**

1ம் வகுப்பு 09.45 – 10.15
சிறுவர்நிலை 10.30 - 11.15
2ம் வகுப்பு 11.45 – 12.30
3ம் வகுப்பு 09.45 – 10.15
4ம் வகுப்பு 09:45 -11:15, 11:45 -12:30
5ம் வகுப்பு 10.30 - 11.15, 11.45 – 12.30
6ம் வகுப்பு 09.45 – 10.45
7ம் வகுப்பு 10.45 – 11.15, 11:45 - 12:15
8ம், 9ம், 10ம் வகுப்பு 09.45 – 11.15

### குறிப்பு:

சுகயீனம் காரணமாக இவ்வாரம் பாடசாலைக்கு வரமுடியாமல் உள்ள மாணவர்கள் விரைவாக தங்கள் வகுப்பாசிரியர்களுக்குத் தகவலை வழங்கவும்.

**கலை வகுப்புகளும் பாடசாலை விதிகளுக்கமைய 12:45-13:30 நடைபெறும்.**

*எமது வளாகத்தில் அஞ்சலி இராஜகோபால் ஆசிரியரிடம் நடனம் பயிலும் மாணவர்களுள் இருவர் தமது முதலாவது தரத்திற்கான தேர்விலே தேர்ச்சியடைந்துள்ளார்கள் என்பதனைப் பெருமையோடு அறியத்தருவதோடு அம் மாணவர்களுக்கும் பயிற்றுவித்த ஆசிரியருக்கும் மனமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துநிற்கின்றோம்.*

### நிதி

கட்டணங்களைச் செலுத்தும்படி வேண்டுகின்றோம்.

### குறிப்பு:

அன்னை தலைமை மற்றும் எம்மால் வழங்கப்பட்ட கட்டண அறவீடுகள் முழுமையாக செலுத்தியவர்கள் மட்டுமே இவ்வாண்டு ஆண்டுக்கூட்டத்தில் பங்கேற்கமுடியும் என்பதனை அறியத்தருகின்றோம். இம்முறை அன்னையின் அனைத்து வளாகத்திற்கும் பொதுவான ஒரு விதிமுறையாகப் பதியப்பட்டுள்ளது என்பதனையும் அறியத்தருகின்றோம்.
மேலதிக விபரம் தேவைப்படின் எம்மைத் தொடர்புகொள்ளவும்.

### ஆண்டுக்கூட்டம் 2022

அன்னை லோறன்ஸ்கூக் வளாகத்தின் ஆண்டுக்கூட்டம் 23.04.2022 நடைபெறும். எங்கே எவ்வாறு நடைபெறும் என்ற விபரத்தினை தீர்மானித்த பின்பு அறியத்தரப்படும்.

**புதிய நிர்வாகத்தில் தேவைப்படும் பொறுப்புகளின் விபரம்.**

1. உதவி வளாகப்பொறுப்பாளர்
2. கல்விப்பொறுப்பாளர்
3. கலைப்பொறுப்பாளர்
4. விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர்
5. நிதிப்பொறுப்பாளர்

இணைந்து செயற்பட விரும்பியவர்கள் விரைவில் வளாக நிருவாகத் தெரிவுக்குழுவினரிடம் தெரிவிக்கவும்.

## நிர்வாகத்தெரிவுக்குழு 2021-2022

1. இளங்கீரன் பெர்ணாண்டோ – keeranmary@gmail.com - 98111594
2. சுரேஷ் முருகேசு – m.sures@hotmail.com - 40457084
3. கௌரிசிரி ஆறுமுகதாஸ் - gowrisria@annai.no - 47244327

## பெற்றோர்குழுவின் அறிவித்தல்

தற்போது வகுப்புப்பிரதிநிதிகள் மற்றும் பெற்றோர்குழுவால் விற்பனையாகும் வடை, றோல்ஸ் தேநீர்ச்சாலை மீண்டும் இயல்பு நிலைக்கு வரும்வரை தொடரும்.

## பெற்றோர்கள் கவனத்திற்கொள்ளவேண்டிய முக்கிய விபரங்களுள் சில...

- மாணவர்கள் மற்றும் பணியாளர்களைத் தவிர வேறுயாரும் பாடசாலைக் கட்டிடத்தினுள் (நிர்வாத்திடம் முன்னறிவித்தல் வழங்காமல்) நுழைய ஒப்புதல் இல்லை.
- மாணவர்கள் மற்றும் பணியாற்றுபவர்கள் யாராவது சுகயீனமானால் அவ்வாரம் அறிவித்தல் வழங்கிவிட்டு பாடசாலை வருவதைத் தவிர்க்கவும்.
- பாடசாலை வந்தபின்பு 48 மணித்தியாலத்திற்குள் யாருக்காவது கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டால் உடனடியாக நிர்வாகத்திற்கு அறிவித்தல் தருவது நன்று.
- பிள்ளைகளுக்குத் தேவையான உணவுப்பொருட்கள், நீர் மற்றும் வகுப்புக்குத் தேவையான கருவிகளை சரிபார்த்து அனுப்புதல் வேண்டும்.
- மாணவர்கள் கட்டிடத்தினுள் மாற்றி அணியக்கூடிய காலணிகளை (Innesko) எடுத்துவரல் வேண்டும்.

- **இனிவரும் காலங்களில் அன்னை லோறன்ஸ்கூக் வளாகத்தின் மின்னஞ்சல் lorenskog@annai.no மற்றும் தொலைபேசி இலக்கம் 91875537**

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

<u>நன்றி!</u>

<u>நிர்வாகம்</u>
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்

**நாம் தமிழர்!**
**தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!**